
தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



## மரியாள்

## Mary

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 14 ஆகஸ்டு 2014 கனி 9

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2012-2014 Posted at Batlagundu Post office on 10 th Aug. 2014

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

To

"கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்"
லூக்கா1:28

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA



இவ்விதழின் ஆசிரியரை அவரது 50வது பிறந்தநாளில் வாழ்த்த வந்தவர்கள்

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

**Editor:**
**B.ARJUNAN**

**Associate Editors:**
**S.Reagan**
**A.Kanagaraj**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட் அவர்களின் செய்தி
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட் அவர்களின் வேதபாடம்
உதவி எழுத்தாளரின் செய்தி
மற்றும்
வாலிபர் பகுதி
பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி
வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 168

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும்.

1. தேவனிடத்தில் அநீதி உண்டென்று சொல்லலாமா?
2. நீ உன் தேசத்திலிருக்கும் நாளெல்லாம் எவனைக் கைவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று இஸ்ரவேலுக்கு சொல்லப்பட்டது?
3. போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனால் கூடுமா?
4. யாக்கோபின் குமாரரான யோசேப்பின் மூத்த குமாரனுடைய பெயர் என்ன? இந்த கோத்திரத்துக்கு பங்கு கிடைத்ததா?
5. பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்கு எவர்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டும்?
6. கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினாரா?
7. சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்கு தடைசெய்தவன் யாரென எந்த சபையாருக்கு பவுல் எழுதுகிறார்?
8. தன் புருஷனையும் பின்பு தன் இரண்டு குமாரர்களையும் இழந்து தனித்தவளாக இருந்தவள் யார்?
9. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் எது உண்டாயிருப்பதாக?
10. அஸ்தோத்தின் ஜனங்களையும், அதின் எல்லைகளுக்குள் இருக்கிறவர்களையும் கர்த்தர் எந்த வியாதியினால் வாதித்தார்?

## மரியாள் Mary

- இயேசுவின் தாய் - மத்.1:16
- ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் என காபிரியேல் தூதனால் அறிவிக்கப்பட்டவள் - (லூக்.1:28)
- இயேசு கானா ஊரிலே நடப்பித்த முதலாம் அற்புதத்தின்போது இயேசுவோடும் அவருடைய சீஷர்களோடும் இவள் இருந்தாள் (யோ.2:1-11)
- இயேசு சிலுவையிலறையப்பட்டபோது அங்கிருந்தாள் (யோவா.19:25-27)
- இயேசு உயிர்த்தெழுந்து பரமேறிய பின்பு கூடின முதலாவது ஜெபக்கூட்டத்தில் சீஷர்களோடு இருந்தாள் (அப்.1:14)



சிறுவர் பகுதி

# கர்த்தர் உன்னோடே இருக்கிறார்

## The Lord Is With You

*-ADS. Sugumar*

வேத பகுதி: நியாயாதிபதிகள் 6:11–40



அன்பார்ந்த தம்பி தங்கைகளே மறுபடியும் உங்களை சந்திக்கும் வாய்பை கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

கிதியோன் பற்றி உங்களுக்கு தெரியுமா? பதினான்கு நியாயாதிபதிகளில் ஒருவன். தேவனிடம் பல விதிமுறைகள் விண்ணப்பித்து சந்தேகப்பட்டவன் (நியா.6:36-40; 17-21; 15-16). இத்தனை கேள்விகள் கர்த்தரிடம் கேட்டும் அவனை தேவன் அடிமைப்பட்டுப்போன இஸ்ரவேலைரை மீட்க தெரிந்துகொண்டார்.

நியாயாதிபதிகளின் காலம் 350 ஆண்டுகள் இஸ்ரவேல் சரித்திரத்தின் இருண்ட காலம் என்று சொல்லலாம். மோசேக்கு பிறகு யோசுவா தலையேற்று சுற்றியுள்ள நாடுகளை வென்றபோதும் நியாயாதிபதிகளின் காலத்தில் அந்நியராக்கப்பட்டு பந்தாடப்பட்டார்கள். ஏன் தேவன் செய்த எல்லா நன்மைகளையும் மறந்து பாகாலை சேவித்தார்கள் (நியா.2:11; 6:9,10). இஸ்ரவேலர் அடிமைப்பட்டு, சித்திரவரைப்படும்போது அவர்கள் தேவனிடம் மன்றாடும்போது நம் தேவனாகிய கர்த்தர் மனதுருகி இவர்களை இரட்சிக்க ஒரு ரட்சகனை ஏற்படுத்தும்படியாக கிதியோனை தெரிந்துகொண்டார்.

கர்த்தருடைய தூதன் தோன்றி; பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் (நியா.6:12). நியாயாதிபதிகள் ஏலி சாமுவேல் போன்றோர் இருந்தும் அவர்களுக்கெல்லாம் சொல்லப்படாத வாக்குத்தத்தம் "கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்ற வாக்குறுதியை அளிக்கிறார். கெபிகளிலும் குகைகளிலும் வாழ்ந்தவர்களை விடுதலையாக்கும்படி கிதியோன் தேர்ந்தெடுத்தார் (நியா.6:2). ஏன்? அவன் தோமாவைப்போல சந்தேகப்பட்டாலும் தேவனுடைய வசனங்களின் மேல் நம்பிக்கையாயிருந்தான். நமக்கு விரோதி யார்? (ரோம.8:31).

அடுத்து அவனுடைய தேவ பக்தி: தன் தகப்பனுக்கும் ஊராருக்கும் எதிராக அவனை கர்த்தர் செயல்படச் சொன்னார் (நியா.6:25-27). அப்படியே செய்து முடித்தான் (யோவா.4;34). அடுத்து அவனின் கீழ்ப்படிதல்: (1சாமு.15:22; நீதி.28:9) சடங்குகள் அல்ல வேதவசனமே உன்னதமானது என்று அவன் கீழ்ப்படிந்தான். எபி.11 அதிகாரத்தின் பிள்ளைகள் எல்லாமே தேவனுக்கு கீழ்ப்படிந்தவர்கள். கிறிஸ்துஇயேசுவும் கீழ்ப்படிந்தார் (எபி.5:8). கிதியோனை எத்தனை கேள்விகள் கேட்டாலும் உனக்கு இருக்கிறபலத்தோடே போ (நியா.6:14) என்றார். சென்றான், வென்றான். அன்பார்ந்த பிள்ளைகளே நாமும் கிதியோனைப்போல கர்த்தருக்கு வசனத்திற்கு கீழ்ப்படிவோமானால் கர்த்தர் நம்மோடும் இருப்பார். மறுபடியும் சந்திப்போம்...

**மனப்பாட வசனம்:**
" நான் உங்களை ஆளமாட்டேன்; என் குமாரனும் உங்களை ஆளமாட்டான்; கர்த்தரே உங்களை ஆளுவாராக"- நியாயாதிபதிகள் 8:23




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 14 ஆகஸ்ட்-2014 கனி - 9


ஆசிரியருரை

# கர்த்தருக்குப் பயப்படும் பயம்

## The Fear of the Lord



கர்த்தருக்குப் பயப்படும் பயம் ஜனங்கள் மத்தியில் குறைவாகவே காணப்படுகிறது. வருவது வரட்டும் கர்த்தர் கவனியார், கர்த்தர் பாரார் என்று துணிந்து அநேகர் பலவிதமான பாவங்களில் இறங்குகின்றனர். அன்பானவர்களே, காதை உண்டாக்கினவர் கவனியாரோ, கண்ணை உண்டாக்கினவர் பாராரோ! இவைகளையெல்லாம் உண்டாக்கினவர் நாம் என்னசெய்கின்றோம் எப்படி ஜீவிக்கின்றோம் என்பதை அநுதினமும் கண்ணோக்கிப்பார்க்கிறார். சாலொமோன் ராஜா தமது நீதிமொழிகள் புத்தகத்தில் எது கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்பதை நமக்கு தெளிவாகச் சொல்கிறார்; "தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்" என்கிறார் (நீதி.8:13). தீமைசெய்வதற்கு அநேகர் தீவிரிக்கின்றனர். யாரையாவது விழப்பண்ணாமலிருந்தால் அவர்களுக்கு தூக்கம் வராது, அதைப்போல பெருமையோடும், கர்வத்தோடும், முன்னுக்குப் பின் முரண்பாடாக பேசுகிறவர்களையும் நாம் அறிகிறோம். இப்படிப்பட்ட காரியங்களை கர்த்தர் வெறுக்கிறார். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்குப் பயப்படாமல். தங்கள் கால்போனபோக்கிலே செல்லக்கூடியவர்கள். தங்களுக்கு தாங்களே போதகர்களாயிருப்பவர்கள்.

இஸ்ரவேலில் அநேகர் இவ்விதமாக இருந்தார்கள். ஆகையால் கர்த்தர் அவர்களைக் குறித்துச் சொல்லும்போது; "என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்: தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்" (எரே.2:13). இன்றைக்கும் இவ்விதமாக தங்களுக்குக் தாங்களே தீமைகளை வருவித்துக்கொள்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய வேதத்திற்கும் செவிகொடாமல் தங்களுக்கு ஏற்றபோதகர்களை அல்லது தங்களுக்கு தாங்களே போதகர்களாக மாறிக்கொண்டு வீணானவைகளைப் பின்பற்றி வீணராய்ப்போய்விடுகிறார்கள். தன்னுடைய ஞானத்தினாலே சம்பாதிக்கிறவன் அந்தப் பணத்தை சம்பாதித்து பொத்தலான பையிலே போடுகிறான். பின்பு தன் பணத்தை அவன் பார்க்கும்போது அதுபோகும் வழியை அறியாமற்போகிறான். இதற்கு தேவனுடைய ஞானம் வேண்டுமல்லவா! இஸ்ரவேலர் தேவனை விட்டுவிடா திருப்பார்களேயானால் அவர்களுக்கு கர்த்தர் போதுமானவராயிருந்திருப்பார். ஆனால் அவர்கள் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய

அவரை விட்டுவிட்டார்கள். தண்ணீர் நிற்காத தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள். இதனால் அவர்கள் திருப்தியுடன் வாழமுடியுமா? இப்படி அநேகர் தங்களை கெடுத்துக்கொள்கிறார்கள். என் அன்பு சகோதரனே, சகோதரியே உன் தேவனாகிய கர்த்தரை விட்டுவிடாதே. அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுப்பார். அவர்கொடுக்கும் தண்ணீரை நீ பெற்றுக்கொண்டால், நீ ஜீவகாலமெல்லாம் ஜீவனுள்ளவர்களாய், இவ்வுலகத்தில் வாழலாம்.

நீதிமொழிகள் 8-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் கர்த்தர் வெறுக்கும் நான்கு காரியங்களை படித்தோம். **அதில் ஒன்று பெருமை - Pride.** மனிதன் ஒவ்வொருநாளும் ஏதாவது ஒரு வகையில் பெருமையோடு வாழவே விரும்புகிறான். தாழ்மையை அநேகர் விரும்புவதில்லை. மற்றவர்கள் நம்மை மதிக்கவேண்டும், நமக்குக் கீழாக அநேகர் வேலைசெய்யவேண்டும் என்றே நினைக்கின்றனர். இப்படி அநேகர் நினைக்கிறபடியால், ஆண்டவர் இயேசு, இவ்வுலகத்திற்கு வந்தபோது அடிமையின் கோலம் பூண்டார். தன்னைத் தானே தாழ்த்தினார். சிலுவையின் மரணபரியந்தமும் தன்னை தாழ்த்தினார். அவர் எவ்வளவு உயர்வானவர்! அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். இப்பேர்பட்ட வல்லமைக்கு பாத்திரரான இயேசு இவ்வுலகத்தில் தன்னை முழுவதுமாக தாழ்த்தி தேவசித்தம் செய்ய தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தார். இச்செய்தியை வாசிக்கும் அன்பு வாசகரே, உன்னிடத்தில் பெருமை காணப்படுகிறதா? உன்னிடத்தில் பெருமை இருந்தால் உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார் என்பதை நீ முதலாவது அறியவேண்டும். தேவனுக்கு பிடிக்காத ஒரு காரியம் உன்னில் காணப்படாதபடி உன்னைப் பார்த்துக்கொள். வேதம் சொல்கிறது; "நாளையத்தினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டாதே; ஒருநாள் பிறப்பதை அறியாயே" (நீதி.27:1). இது எத்தனை உண்மையான காரியம். ஒருநாள் பிறப்பதை நாம் அறியோம். நாளைக்கு நடப்பது யாருக்கும் தெரியாது. அப்படி தெரியுமானால் அவர்கள் சொல்லியிருப்பார்கள் நாளைய தினம் நான் சரியாக 2.00மணிக்கு மரித்துவிடுவேன். ஆகையால் நம் உறவினருக்கு தகவல் கொடுத்துவிடுங்கள் என்று யாராவது தன்னுடைய மரண நாளை சரியாய் சொன்னது உண்டா? அல்லது நாளைக்கு இன்ன இடத்தில், இன்னதை வாங்குவோம் என்று சொல்லி அந்தப்படியாக அவர்கள் சென்றடைந்து அதை வாங்கியது உண்டா? விழுந்தால்தான் நிச்சயம் என்று முதியவர்கள் சொல்லக்கேள்விப்படுகிறோம். ஆம், ஒரு நாள் பிறப்பதை நாம் அறியோம். நம்முடைய ஜீவன் புல்லின் பூவைப்போல ஒழிந்துபோகிறது. ஆகையால் உங்களில் பெருமை எழும்பாமல் பார்த்துக்கொள்ளுங்கள். "...தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொலியிருக்கிறது" என யாக்கோபு நமக்கு நினைப்பூட்டுகிறார் (யாக்.4:6). தேவன் பெருமையை வெறுப்பது மாத்திரமல்ல, அப்படிப்பட்டவைகளுக்கு அவர் எதிர்த்தும் நிற்கிறார். நமக்குள்ளே பெருமை இருக்குமானால், நாம் இங்கே நினைக்கவேண்டும். என் தேவன் அதை வெறுக்கிறார், அதற்கு எதிர்த்தும் நிற்கிறார். ஆகையால் என் வாழ்வில் பெருமைக்கு இடம் கொடுக்க மாட்டேன் என்ற தீர்மானத்தோடு செயல்படுங்கள்.

**இரண்டாவது அகந்தை - Arrogance.** அகந்தை இருக்கும்போது சண்டை சச்சரவுகள் அதிகரிக்கும். "அகந்தையினால்மாத்திரம் வாது பிறக்கும்; ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு" என்று நீதி.13:10-ல் வாசிக்கிறோம். அநேக குடும்பங்களில் சண்டைகள் எழும்புவதற்கு இதுவே மூலகாரணமாயிருக்கிறது. அகந்தை குடிகொள்ளும்போது அக்குடும்பங்களில் சண்டை எழும்புகிறது. இது அழிவுக்கு ஒரு மனிதனைக் கொண்டு செல்லும். ஏனெனில் "அழிவுக்கு முன்னானது மனமேட்டிமை" என



தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாயிருந்தனர். கீழ்ப்படியாமையினாலே தள்ளப்பட்டனர். ஆகவே இப்பொழுது புறஜாதியாரும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாயிருக்கின்றனர்.

**இ. சுவிசேஷத்தின்படி தேவனுடைய அழைப்புக்கு மனிதன் செவி சாய்க்கவேண்டும் (தெச.1:5).**

1. தேர்வு மற்றும் சுவிசேஷம் என்பதற்கு இடையே உள்ள தொடர்பை "ஏனென்றால்" என்ற வார்த்தை வெளிப்படுத்துகிறது.

2. சுவிசேஷம் எப்படி அவர்களுக்கு வந்ததென்று கவனித்துப்பாருங்கள். தேவனுடைய தேர்வுக்கு (தெரிந்துகொள்ளுதலுக்கு) சுவிசேஷம் ஒரு கருவியாகும்.

1. அது வல்லமையோடு வந்தது.

2. அது பரிசுத்த ஆவியானவரோடு வந்தது.

3. அது ஆழ்ந்த துக்கத்துடன் கூடிய மனமாற்றத்தோடு வந்தது. அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தின்படி உண்மையாய் வாழ்ந்தார்கள். சுவிசேஷத்தை யாரெல்லாம் ஏற்றுக்கொள்வதற்கு கீழ்ப்படிகிறார்களோ அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். கர்த்தரை விசுவாசிப்பவர்களை அவர் தேர்வு செய்கிறார்.

4. பின்பு தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலுள்ள சகல ஆசீர்வாதத்தாலும் ஆசீர்வதிக்கிறார் (எபே.1:3).

**II. கிறிஸ்தவர்கள் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள் (1:6) வாழ்க்கையை தேர்வு (தெரிந்துகொள்ளப்படுதல்) மாற்றுகிறது.**

**அ. பின்பற்றுபவர் (யாரைப் பின்பற்றுகிறாரோ) அவர் செய்ததை அப்படியே செய்வார்.**

1. கிறிஸ்துவின் சீடர்கள் அவரை அப்படியே பின்பற்றுகிறவர்கள், வெறும் பேச்சாளர்கள் அல்ல.

2. அநேக பாடல்கள் கிறிஸ்துவைப் பின்பற்றும் விருப்பம் அவர்களுக்கு இருப்பதைப் போதிக்கின்றன.

அ. "அவர் எங்கு நடத்துகிறாரோ அங்கே அவர் பின் செல்வேன்"

ஆ. இயேசுவின் அடிச்சுவடுகள் எங்கெல்லாம் செல்கிறதோ அங்கெல்லாம் இயேசுவின் அடிகளைத் தொடர்வேன்.

**ஆ. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் அவருடைய வார்த்தையைத் தழுவி அதை ஏற்றுக்கொள்ளுபவர் (1:6).**

1. வார்த்தையை இது இருதயத்தில் வைத்து செயல்படுவதைக் குறிக்கும்.

2. அநேக மதத் தொடர்பான உரையாடல்கள் கர்த்தரை வரவேற்பது அல்லது ஏற்றுக்கொள்வதைப் பற்றியதே, இது தேவனுடைய செயலை வலியுறுத்துவதாகும்.

3. பவுல் நம்முடைய பொறுப்பை வலியுறுத்துகிறார். வார்த்தையை வரவேற்பதென்றால் அதற்கு நாம் கீழ்ப்படியத் தொடங்குகிறோம் என்று அர்த்தம். அது ஏற்றுக் கொள்ளப்பட தகுதியானது ஏனென்றால் அது தேவனுடைய வார்த்தை (1தெச.2:13).


**ஜெபியுங்கள்**



▸▸ தேனிமாவட்டத்திலுள்ள கம்பம் பகுதியில் நடைபெற்று வரும் கர்த்தருடைய சபையில் கடந்த மாதம் 16 பேர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். இவர்களை சகோ.ஜீவதுரை அவர்கள் வழிநடத்த இவ்விதழின் ஆசிரியர் சகோ. அர்ஜுனன் அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். இவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்காக...

▸▸ இம்மாதம் 26,27 மற்றும் 28 தேதிகளில் சென்னையில் வேதபாட வகுப்புகளும் மாலை நேர சுவிசேஷ கூட்டங்களும் நடைபெறவுள்ளது. இக்கூட்டங்களுக்காக...

▸▸ செப்டம்பர் மாதம் தேனி மாவட்டத்திலுள்ள குமுளியில் ஒருநாள் விசேஷ கூட்டம் நடைபெறவுள்ளது. தேதி பின்பு அறிவிக்கப்படும் இதற்காக...




# பாடம் –8 மாதிரி சபை

***- Jerry Bates***

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

1. ஒரு மாதிரி சபையை (பரிபூரணமானதல்ல) பெயர் சொல்லும்படி நான் கேட்டுக் கொள்ளப்பட்டால் ஒரு பெயரைச் சொல்ல மிகவும் சிரமப்படுவேன். நான் சம்பந்தப்பட்டிருந்த எல்லா சபையிலும் ஏதாவதொரு குறையிருந்தது.

2. ஒரு சபையினுடைய விசுவாசமும் அதனுடைய ஆயிட்காலமும், அது நடத்தும் திட்டங்கள் சற்றும் செயல்பாடுகள், அதனுடைய அளவு மற்றும் எண்ணிக்கை, அதனுடைய பாரம்பரியம் மற்றும் மாற்றங்கள் போன்றவற்றால் அளவிடப்படுவதில்லை. ஆனால் அதனுடைய ஆவிக்குரிய தன்மையால் அளவிடப்படும். ஆவிக்குரிய தன்மை என்பது நாம் எப்படியிருக்கிறோம் நாம் எப்படி மாற்றம் அடைகிறோம் என்பதுதான்.

3. தெசலோனிக்கேயாவில் உள்ள சபை ஒரு மாதிரி சபை (எ.டு) சபை (1:7) மாதிரி, அது ஒரு பரிபூரணமான சபை அல்ல அது எப்படி இருக்கவேண்டுமோ அப்படிப்பட்டதல்ல. ஆனால் உண்மையானது.

4. இந்த புத்தகம் நம்மை நம்முடைய துவக்கத்திற்கு அழைத்துச் செல்லுகிறது.

5. கிறிஸ்தவர் என்றால் என்ன பொருள்: அநேக வித்தியாசமான பதில்கள் உள்ளன.

அ. மேற்கத்திய கலாச்சாரத்தில் மத மற்றும் சமூக அமைப்பின் ஒரு பகுதி.

ஆ. நாகரிகமானது

இ. அன்பும் மன உருக்கமும் மற்றவர்களைப் பற்றிய சிந்தையும் உடையது.

ஈ. இயேசுவானவர் இந்த பூமியில் வாழ்ந்தார் என்ற உண்மையை ஏற்றுக் கொள்வது நாகரிகமானது.

உ. இந்த உண்மையை ஏற்றுக் கொள்கிறவர் சபைக்கு செல்லுகிறவர்

6. தெசலோனிக்கேய சபை - ஒரு மாதிரி சபையின் மற்ற குணாதிசயங்கள் எந்த குணாதிசயங்கள் ஒரு சபையை மாதிரி சபையாக மாற்றுகின்றதோ அதே குணாதிசங்கள் மாதிரி கிறிஸ்தவனாக மாற்றும்.

**1. கிறிஸ்தவர் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் (1:4) தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள்**

**அ. தெரிந்துகொள்ளுதல் என்றாலே சொந்தம் கொண்டாடுதல் என்ற சிந்தை அதிலே இருக்கிறது.**

1. கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகோதரத்துவத்தை குறிப்பதற்காக பவுல் சகோதரர்கள் என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார்.

2. தேவனால் நேசிக்கப்பட்டவர்கள் என்று சொல்லும் போது அது இந்த உறவை மேலும் பெலப்படுத்துகிறதாய் இருக்கிறது.

**ஆ. தேர்வு கர்த்தரிடம் துவங்குகிறது. (2தெச.2:13) கர்த்தருக்குள் பிரியமான சகோதரரே நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும் சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்து கொண்டபடியினாலே நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.**

1. தேவன் முதலாவது செயல்பட்டார். தேர்வில் அன்பு இருக்கவேண்டியது அவசியம்.

2. இந்த தேர்வு நிபந்தனைக்கு உட்பட்டது. நிபந்தனைக்கு உட்பட்டதாய் இருந்தால் ஏன் இவ்வளவு மக்கள் மரிக்கிறார்கள். தேவனே காரணர்.

3. ஒரு தனிநபர் பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ செல்லவேண்மென முன் குறிக்கப்பட தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஆனால் முன்னதாக யூதர்கள் தேவனால்



காண்கிறோம் (நீதி.16:18). ஒரு மனிதன் விழப்போகிறான் என்றால் அவனுடைய வாழ்வில் அகந்தை அதாவது மனமேட்டிமை காணப்படுகிறது என்று அர்த்தம். அவன் சடுதியில் விழுவான். தம்முடைய பிள்ளைகள் தம்மைப்போல இருக்கும்படியாக தேவன் விரும்புகிறார். ஆகையால் இப்படிப்பட்ட காரியங்களை கர்த்தர் வெறுக்கிறார் என அறிகிறோம். அன்பானவர்களே, இப்படிப்பட்ட காரியங்கள் உங்களுடைய ஜீவியத்தில் காணப்படுமானால் அவைகளை களைந்துபோடுங்கள். கர்த்தருக்குப் பிரியமானதை செய்ய நாடுங்கள்.

**மூன்றாவது தீயவழி** - **Evil way.** நாம் முன்னமே தியானித்தபடி சிலருக்கு தீங்கு செய்யாமலிருந்தால் தூக்கம் வராது. யாரையாவது கெடுக்கவேண்டும். அதை கண்டு சந்தோஷப்படவேண்டுமென்று தீங்குசெய்வதற்கு தீவிரிப்பார்கள். சாலொமோனும் இப்படிப்பட்டவர்களைக்குறித்து சொல்லும்போது; "தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால்" என குறிப்பிடுகிறார் (நீதி.6:18). கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்களில் இதுவும் ஒன்று. மேலும், பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக. நீயும் அவனைக் குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்துநின்றவன். நான் முதல்விசை உத்தரவு சொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக்கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக. கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன். கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" என்று எழுதுகிறார் (2தீமோ.4:14-18). பவுலுக்கு சுவிசேஷத்தில் அநேக பாடுகள் பிரச்சனைகள் இருந்தது. ஆனால் எல்லா பாடுகளிலும் தீங்கிலுமிருந்து கர்த்தர் பவுலைக் காப்பாற்றினார். கன்னானாகிய அலெக்சாந்தர் அவருக்கு ஊழியத்தில் வெகு தீமை செய்ததை குறித்து சொல்லுகிறார். நம்முடைய ஜீவியத்திலும் உடன் உள்ளவர்கள் மூலமும், கள்ளச்சகோதரர்கள் மூலமும் அநேக தீங்குகள் ஏற்படுத்தப்படுகிறது. பவுலை எல்லாத் தீங்குக்கும் விடுவித்த கர்த்தர் நம்மையும் விடுவிப்பார் என்ற நம்பிக்கையோடு அவைகளை கர்த்தருடைய சமுகத்திற்கு விட்டுவிடவேண்டும். பதிலுக்கு பதில் செய்வது நியாயப்பிரமாணத்தின்போதனை. புதிய உடன்படிக்கையின்படி ஜீவிக்கிற நாம் நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடம்கொடுங்கள். "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" ரோம.12:19-ல் பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதியதைபோல தீமைசெய்தவர்களை நாம் பழிவாங்காமல் நாம் தேவனுடைய சமுகத்திற்கு விட்டுவிடவேண்டும்.

**நான்காவது புரட்டுவாய்** - **The perverse mouth.** முன்னுக்குப் பின் முரண்பாடாக பேசுவது. அதாவது பொய் பேசுவது. பொய் பேசும் வாய்க்குப் போஜனம் கிடைக்காது என முதியவர்கள் சொல்லக்கேள்விப்பட்டிருக்கிறோம். சிலர் பொய்யை தங்களுடைய சரீரத்தில் அணிந்துகொண்டு வாழ்கின்றார்கள். வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையும் பொய்யாய் இருக்கும். இதை அவர்கள் பெரிதாக கருதுவதில்லை. பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே

பங்கடைவார்கள் என வெளிப்படுத்தின புத்தகத்தில் படிக்கிறோம். தேவன் இப்படிப்பட்டவர்களை வெறுக்கிறார். தேவன் வெறுக்கிற ஏழு காரியங்களில் இதுவும் ஒன்று "அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல்" (நீதி.6:19). தேவன் நமக்கு உடல் உறுப்புகளில் மூன்று முக்கியமானவைகளை கொடுத்திருக்கிறார். ஒன்று கேட்கிற காதுகள், இரண்டு காண்கிற கண்கள், மூன்று பேசுகிற வாய். இவைகளை நம்முடைய ஜீவிய நாட்களிலெல்லாம் நலமான காரியங்களுக்கு பயன்படுத்தவேண்டும். இதை மனிதன் சிந்திக்காதவனாக காண்கிறதெல்லாம் நமக்குத்தான் என்று நினைத்து இச்சிக்கிறான். கேட்கிற எல்லாவற்றையும் கேட்டு கோள்சொல்லுகிறவனாய் மாறிவிடுகிறான். வாயிக்கு வந்ததெல்லாம் பேசி பொய்யனாய் போய்விடுகிறான். அன்பானவர்களே, நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள்? நீங்கள் மற்றவர்களோடு உண்மையை பேசி உள்ளளவும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்று அநுபவியுங்கள். இன்றைய நாள் செய்தியிலே கர்த்தர் வெறுக்கிற நான்கு காரியங்களைக்குறித்து பரிசுத்த வேதாகமத்திலிருந்து தியானித்தோம். கர்த்தர் வெறுக்கிற பெருமையையும், அகந்தையையும், தீயவழிகளையும், புரட்டுவாயையும் நம்மை விட்டு அகற்றுவோம். அப்பொழுது சதாகாலமும் ஜீவிக்கிற கர்த்தர் நம்மோடு இருப்பார்.

**பாவிகள் நூறு பொல்லப்பை செய்து நன்றாய் வாழ்ந்துகொண்டிருக்கிறார்களே அது எப்படி?**

இன்றைக்கு அநேகர் சத்தியத்திலிருந்து வழிவிலகிப்போவது பெரும்பாலும் இப்படிப்பட்ட துன்மார்க்கர்களைப் பார்த்துத்தான். அவர்கள் எல்லாம் கணக்கில்லா பாவங்களைச் செய்து நன்றாய் இருக்கிறார்களே என்று சொல்லி தாங்களும் அப்படிப்பட்ட வழியை தெரிந்துகொண்டு பாவத்தில் விழுந்துபோகிறார்கள். ஆனால் வேதம் நமக்குப்போதிப்பது என்ன? "பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்" என்கிறார் பிரசங்கி (பிர.8:12). யோபு என்ற தேவ மனிதனுக்கு வந்த கஷ்டங்கள் இந்தப் பூமியில் ஒருவருக்கும் வந்திருக்க வாய்ப்பில்லை என்று எண்ணுகிறேன். அவனுக்கு உண்டான எல்லாம் பறிபோய் விட்டது. ஆனாலும் அவன் தேவனைக் குறித்து குறைசொல்லவில்லை. கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் என்று சொல்லி தன்னுடைய உத்தமத்தில் நிலைத்திருந்தான். அவைகளை விட்டு அவன் பின்வாங்கவில்லை. ஆனபடியால் இறுதியில் அவன் இப்பூமியிலே இரட்டிப்பான ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொண்டான். வாழ்க்கையில் நூறு பொல்லப்பை செய்து நீடித்து வாழ்ந்துகொண்டிருக்கிறவர்களை நாம் நோக்கிப்பார்க்காமல், யோபுவைப்போன்றவர்களை நோக்கிப்பார்த்து தேவனுக்கு அஞ்சி நடக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். என்னபாடுகள் பிரச்சனைகள் வந்தாலும் அவைகளுக்கு நாம் எதிர்த்து நின்று போரிடவேண்டும். தேவன் நமக்கு சர்வாயுதவர்க்கத்தை கொடுத்திருக்கிறார். சகல நேரத்திலும் வேத வசனமாகிய பட்டயத்தை எடுத்துக்கொண்டு வாழ்கிறவர்களாக இருக்கவேண்டும். வாழ்க்கை என்பது அது அற்புதமான தேவனுடைய திட்டம். அந்த திட்டத்தில் நாம் அவருடைய பிள்ளைகள். நாம் என்ன செய்கிறோம்? எப்படி வாழ்கின்றோம் என்பதை அநுதினமும் தேவன் கண்ணோக்கிப்பார்க்கிறார். ஆகையால் தேவனுக்கு அஞ்சி அதாவது தேவனுக்குப் பயப்படும் பயத்தோடு வாழுங்கள். அப்பொழுது தேவனால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் - நீதிமொழிகள் 1:7**



## கர்த்தரின் பிள்ளைகளே கலங்காதீர்கள்...

**தன் இளம் பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது (புலம்பல் 3:27)**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே... தன் இளம் பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது நல்லது. பிற்காலத்தில் நமக்கு அதிக துன்பம் வந்தாலும் தாங்கிக்கொள்ளமுடியும். நாம் இளமையில் இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழக்கற்றுக்கொள்ளவேண்டும். ஆசை எல்லையற்றது. பொருள்களின் மேல் ஆசைவைத்தால் அதைக் குறைக்க முடியாது. பல நேரங்களில் நாம் ஆசைப்பட்டது கிடைக்கவில்லையென்றால் அதை நாம் தாங்கிக்கொள்ள முடியாமற்போகின்றோம்.

எல்லாவற்றையும் தேவனுடைய சித்தத்திற்கு விட்டுவிட வேண்டும். நாளை நடப்பதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். தேவனுடைய விருப்பத்தை அறிந்துகொள்ளுங்கள். இந்த உலக வாழ்க்கையைக் குறித்து கவலைப்படவேண்டாம். இது கொஞ்சநாள் வாழ்வு. இதற்கு பின்பு நித்திய நித்தியமாக தேவனோடு வாழப்போகின்றோம். அதுவே நிலையான வாழ்வு.

**சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் - (சங்கீதம் 46:11)**

**- A.பிரபாகரன்**

## நம்பிக்கையாய் இருங்கள்! பயப்படாதிருங்கள்!! கவலைப்படாதிருங்கள்!!!

**இதோ, தேவனே என் இரட்சிப்பு நான் பயப்படாமல் நம்பிக்கையாய் இருப்பேன் (ஏசா.12:2)**

இயேசு கிறிஸ்து ஒருமுறை கலிலேயா கடற்கரைக்கு சென்று படகில் ஏறினபோது அவருடைய சீஷர்களும் அவருக்குப் பின்சென்று படகில் ஏறினார்கள். கடலில் படகு வெகுதூரம் சென்றபோது பெருங்காற்று உண்டாயிற்று. கடல் அலைகளில் படகு தத்தளித்தது படகில் தண்ணீர் நிரம்பத்தக்கதாய் மூழ்கும் நிலை ஏற்பட்டது. அவ்வேளையில் இயேசு கிறிஸ்து படகில் நித்திரையாய் இருந்தார். சீஷர்களோ படகு கடலில் மூழ்கி உயிரிழந்து விடுவோம் என்ற பயத்தில் அவரை எழுப்பி "போதகரே" நாங்கள் மடிந்துபோவது பற்றி உமக்குக் கவலையில்லையா என்று கேட்டார்கள். அவர் உடனே எழுந்து காற்றையும் கடலையும் பார்த்து அதட்டி, இரையாதே அமைதலாயிறு என்று சொல்ல அப்படியே ஆனது.

அதன்பிறகு சீஷர்களைப்பார்த்து: ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல் போயிற்று எனக்கேட்டார். சிலவேளைகளில் நாமும் இப்படித்தானிருக்கிறோம்.

**உன் சுயபுத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள் அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைபடுத்துவார்**

**(நீதி.3:5,6) - M.இராஜாமணி**

# இராஜ்யம் - Kingdom

A.Kanagaraj
Associate Editor



கிறிஸ்துவின் பிறப்பிற்கு ஆறு மாதத்திற்கு முன்பு பிறந்த யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். அவனைப்போலவே ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு பிரசங்கம் பண்ணினார். மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்றார் (மத்.3:1-2,17). இயேசு தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்புகையில் "பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கியுங்கள் என்று அனுப்பினார் (மத்.10:7). ஒரு முறை சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுக்கும்போது; உம்முடைய ராஜ்யம் வருவதாக என்றார். இயேசுவானவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழும் நாள்வரைக்கும் இப்படியாக சீஷர்கள் ஜெபித்துவந்தார்கள்.

ஒரு முறை இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை பார்த்து சொல்லுகையில்; "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக்காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மாற்.9:1; லூக்.9:27). அவர்கள் உயிரோடே இருக்கும்போதே "ராஜ்யம்" வரும் என்பதைக் கேட்டவுடன் பெரிய சந்தோஷம் அடைந்திருப்பார்கள். இந்த ராஜ்யம் முதன் முதலில் எங்கே ஸ்தாபிக்கப்படும் என்பதை கூட தீர்க்கதரிசி ஏசாயா, தானியேல் போன்றவர்கள் மூலமாக கி.மு 600 -740 வருஷத்திற்கு முன் உரைக்கப்பட்டது. கி.பி. 33-ஆம் ஆண்டு நிறைவேறுவதை சரித்திரம் பேசுகிறது. ஏசாயா2:3-ன்படி எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனம் வெளிப்பட்டது. லூக்.24:47-ம் வசனத்தில் இயேசு உயிர்த்தெழுந்த பின் தன் சீஷர்களுக்கு தரிசனமாகும்போது; "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" என்றார். அடுத்ததாக அப்போஸ்தலநடபடிகள் 1:5-ம் வசனத்தில் நினைப்பூட்டுகிறார் "நீங்கள் எருசலேமை விட்டுபோகாமலும் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக்காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்". ஆதி அப்போஸ்தலர்கள் இந்தக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள். எருசலேமில் கூடியிருக்கும்போது; என்ன நடக்கும் என்பதை முன்கூடியே கி.மு 850 வருடத்திற்கு முன் யோவேல் தீர்க்கதரிசி கூறினது நடந்தன. "மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" ஆகையால் நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் (லூக்.24:49).

சபையை ராஜ்யம், சரீரம் எனவேதாகமம் போதிக்கிறது. சபை என்பது இரட்சிக்கப் பட்டவர்கள் கூட்டம். பரிசுத்தவான்கள் கூட்டம், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் கூட்டம், அழைக்கப்பட்டவர்களின் கூட்டம், இவ்வுலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர் களின் கூட்டம் என பல கோணத்தில் அழைக்கப்படுகிறார்கள். பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உங்களுக்குத்தருவேன் என்றார். திறவுகோல் என்பது சத்திய வார்த்தைகள். ஜீவனுள்ள வார்த்தைகளைப்படிக்கும்போதும், கேட்கும்போதும் நமது இருதயம் திறக்கப்பட்டு, விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்படுகிறோம். ஒருவன் ராஜ்யத்தில் பிறக்க அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறக்கவேண்டும். இந்த ராஜ்யத்தைத் தேடி தடவியாகிலும் ஒருவன் கண்டுபிடிக்கவில்லையென்றால் இவ்வுலக வாழ்வு அவனுக்கு ஒரு பூஜ்ஜியமாகிப்போம்.



# கிறிஸ்துவின் சாயல் - Image of Christ

S.I.Reagan
Associate Editor




வாசகர்களுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கிறிஸ்துவின் சாயல் என்ற தலைப்பில் இம்மாதம் எழுத வாய்ப்பை தந்த நம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

பிரியமானவர்களே, இன்று உள்ள அநேகர் மனிதர்களின் சாயல் அவர்களின் குடும்பத்தில் யாராவது ஒருவருடைய சாயலில் இருப்பார்கள். ஆனால் அது அழிந்து போகும் சாயல் என்று அறிவதில்லை. ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரும்போது அவனுடைய சரீரபிரகாரமான சாயல் ஒழிந்து ஆவிக்குரிய கிறிஸ்துவின் சாயலை அடைகின்றான். கிறிஸ்தவர்களாக நாம் தேவனுடைய சாயலை தரித்திருக்கிறோம் என்பதை ஆதி.1:26-ல் தெளிவாக வாசிக்கிறோம்.

இதில் தேவன் தமது சாயல் மற்றும் தமது ரூபம் என்று எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய சாயலை தரித்த நாம் அவரைப்போல இவ்வுலகில் வாழ்வது அவசியம் அல்லவா! இயேசு கிறிஸ்து பிதாவின் சாயலை தரித்தவராய் வாழ்ந்து நமக்கு வழி காட்டினார். கொலோ.1:15-ல் தேவனுடைய தற்சுரூபமும் என்று வாசிக்கிறோம். கிறிஸ்து பிதாவின் (அதாவது தன் தேவனுடைய சாயலை தரித்திருக்கிறார்) என்னை காண்கிறவன் என்னை அனுப்பின பிதாவைக் காண்கிறான் என்றார். பிதாவின் சாயலை நாம் கிறிஸ்துவில் பார்ப்பதுபோல கிறிஸ்துவின் சாயல் நம்மில் காணப்படவேண்டும் அல்லவா? ரோமர் 8:29-ல் கிறிஸ்துவின் சாயலின்படி பிதா நம்மை முன் குறித்து அழைத்திருக்கிறார். பிதாவின் சாயலில் காணப்படும் கிறிஸ்து கடைசிவரை பிதாவின் சித்தத்தை சரியாய் செய்து முடித்தார் என்று யோவான் 17:4-ல் பார்க்கிறோம். ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லியும் நாம் இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினதுபோல நாமும் கிறிஸ்து நமக்கு காண்பித்த வசனங்களின்படி நடக்கவேண்டும் என 1யோவா.2:6-ல் காண்கிறோம்.

பிரியமானவர்களே, பிலி.2:5-8 வசனங்களில் அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தமும் தம்மைத் தாமே தாழ்த்தினார். மேலும் மத்.5:43,44-ல் நம்முடைய சத்துருக்களை மன்னிக்கவும், அவர்களுக்காக ஜெபம் பண்ணவேண்டுமென்றும், யோவா.3:16-ல் அவரைப்போல மற்றவர்களிடத்திலும் அன்பு செலுத்தவேண்டுமென்றும், யோவா.8:31-ல் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்கிறவர்களாக இருக்கவேண்டுமென்றும் போதிக்கிறதைப் பார்க்கிறோம். இவ்விதமாக அவருடைய சாயலில் இருந்துகொண்டு ஜீவிப்போமானால் தேவனுடைய பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம். எனவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை மட்டும் அவருடைய வசனத்தின்படி அவருடைய சாயலில் ஜீவிப்போம்.

**உலக மொழிகள் ஒரு தகவல்**

உலகில் 2796 மொழிகள் உள்ளன. இவற்றில் இலக்கிய இலக்கணம் பெற்றவை 600 மொழிகள். இவற்றுள்ளும் 2000 ஆண்டுகள் தொன்மை வரலாறு உடையவை தமிழ், சீனம், இலத்தீன், ஈபுரு, கிரேக்கம், அராமிக் என்னும் 6 மொழிகளே ஆகும்.

–நன்றி தமிழர் சமயம் இதழ்

# ஏன் இயேசு சிலுவையில் மரித்தார்?
## Why Christ Died on The Cross?

*J.C.Choate*



ஆதியில் தேவன் மனுஷனையும், மனுஷியையும் சிருஷ்டித்தபோது அவர்கள் குற்றமற்றவர்களாகவும் பாவமற்றவர்களாகவும் இருந்தனர். ஆனால் அவர்கள் அந்த பரிசுத்த நிலையில் அதிகநாட்கள் நிலைத்திருக்கவில்லை, சீக்கிரமாகவே அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் ஆவியில் மரித்து, அழகான ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டு, மனுஷன் தன் முகத்தின் வியர்வையால் ஆகாரம் புசிக்கவும், மனுஷி வேதனையோடே பிள்ளை பெறவும், முடிவிலே சரீரத்தில் மரிக்கவும் (ஆதி1-3) இப்படியாக தங்களுடைய பாவத்தின் விளைவினை அனுபவிக்க வேண்டியவனானான். இப்போது மனுஷன் தனக்கும் தேவனுக்குமிடையே பாவம் வந்ததால் தேவனுடைய பகைஞனானான்.

மனுஷன் குற்றமற்ற நிலைக்கு வரும்படி தானே தன்னை பழைய நிலைக்கு திருப்பிக்கொண்டு வர இயலாதபடியினாலும், அதைப்போலவே மிருக பலி தன் பாவத்தை நிரந்தரமாக நிவர்த்தி செய்ய முடியாதபடியினாலும், உலகத்தின் பாவங்களுக்காக குற்றமற்ற பலியாயிருக்கும்படிக்கும் தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராக ஊழியஞ் செய்யும்படிக்கும் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி, இவ்விதமாக மனுஷன் தேவனிடத்திற்கு வர ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தினார் (எபி.10:4; ஆதி3:15). எனவே குறித்த காலத்தில் கன்னிகையாகிய மரியாளுக்குப் பிறக்கும்படி தேவன் தம்முடைய குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். மரியாளுக்கு நியமிக்கப்பட்டிருந்த யோசேப்புக்குக் கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் காணப்பட்டு, “அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்” (மத்.1:21).

வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்தபடியும் தீர்க்கதரிசனம் உரைக்கப் பட்டிருந்தபடியும் இயேசு இவ்வுலகத்தில் வந்தார் என அறிவிக்கப்பட்டிருக்கிறோம். ஆச்சரியம், ஆனால் தேவன் அவரை மரிக்கும்படிக்கு அனுப்பினார். “தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்” (யோவா.3:16-17) என வாசிக்கிறோம். தேவன் அவரை மரிப்பதற்கு மாத்திரம் அனுப்பவில்லை, பாவிகளுக்காகவும், தேவனற்றவர்களுக்காகவும், துன்மார்க் கருக்காகவும் அவர் மரித்தார். “அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்



பெண்கள் பகுதி

# சாத்தானால் வஞ்சிக்கப்படுதல்
## Deceived From the Satan

*- Glory Arjunan*



இன்றைய உலகம் அநேகரை வஞ்சிக்கின்றதாக காட்சியளிக்கிறது. இப்படிப்பட்ட உலகில் ஸ்திரீகளாகிய நாம் அநேகவிஷயங்களில் வஞ்சிக்கப்படுகின்றோம். நமது ஆதித்தாயாகிய ஏவாளும் கூட கண்களின் இச்சைக்கு இடமளித்து வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள், நாமும் கூட இந்த மாய உலகை இச்சித்து மாய்ந்து போய்விடக்கூடாது. கிறிஸ்தவ சகோதரிகளுக்கு வேதாகமத்தின் மூலம் எச்சரிப்பின் சத்தம் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. இச்சத்தத்திற்கு செவிசாய்ப்போமா?

**சாத்தானால் வஞ்சிக்கப்படுதல்:** சாத்தான் நம்மை வஞ்சிக்கிறவனாயிருக்கிறபடியால் சாத்தானால் நாம் வஞ்சிக்கப்படுகிறோம். ஏவாளை சர்ப்பம் வஞ்சித்தது என ஆதி.3:13-ல் வாசிக்கிறோம். ஏவாளின் பார்வைக்கு இன்பமாய் காட்சியளித்தது அந்த விலக்கப்பட்ட கனி. அதைப் புசித்தாள், மீறுதலுக்குட்பட்டாள் (1தீமோ.2:14). அவளுடைய கண்களின் இச்சை சாத்தானுக்கு இடமளிக்கச் செய்தது முடிவில் சர்ப்பம் வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள் (ஆதி.3:13). இதைப்போலவே பொருளாசையாகிய பிசாசு நம்மை வஞ்சிக்கிறது. ஆம், நமக்கு உலகப்பொருட்களின் மேல் அளவில்லா ஆசை ஏற்படுகிறது, அதை வாங்கலாமா? இதை வாங்கலாமா? என ஸ்திரீகள் அழிந்து போகும் பொருட்களின் மீது கண்களைப் பறக்கவிட்டு பொருளாசையில் பழகிபோய்விடுகின்றனர். இப்படி பொருளாசையில் பழகின இருதயமுடையவர்களை வேதம் சாபத்தின் பிள்ளைகள் (2பேது.2:14) என அழைக்கிறது. அன்பு சகோதரிகளே, நாம் ஆசீர்வதிக்கப்படவே அழைக்கப்பட்டுள்ளோம். பிசாசு நம்மை வஞ்சிக்க இடம் கொடாதிருப்போம். நம்முடைய நாட்டில் கறிக்கோழி வளர்ப்பது போல சில வெளிநாடுகளில் மாம்சத்திற்கென்று வெள்ளை பன்றி வளர்ப்பார்களாம். அவைகளை கசாப்புக் கடைக்குப் பிடித்து செல்லுவது மிகக்கடினமாம். எனவே அவைகளுக்குப்பிடித்தமான பீன்ஸ் பயிர்களை அவைகளுக்கு முன் அள்ளி இறைப்பார்கள், அந்த பன்றிகள் பீன்ஸ் பயிர்களால் ஈர்க்கப்பட்டு கசாப்பு கடைவரை இறைக்கப்பட்ட பயிர்களைத் தின்னும் ஆர்வத்தில் தங்களுடைய நிலையை அறியாமல் கசாப்பு கடைக்கே வந்து சேர்ந்துவிடுமாம். பார்த்தீர்களா! சகோதரிகளே உலகம் இப்படித்தான் பல பொருட்களின் மேல் ஆசைகொள்ளசெய்து நம்மை சாபத்திற்குள்ளாக்கிவிடும். சாத்தான் நம்மை வஞ்சிக்க இடங்கொடாது அவனுக்கு எதிர்த்து நிற்போமாக!

அன்பு சகோதரிகளே, வேதம் எச்சரிக்கிறபடி சாத்தான் நம்மை வஞ்சிக்க இடம் கொடாமல், கண்களின் இச்சைக்கு விலகி, தேவனுடைய வார்த்தையைப் பற்றிக்கொண்டு நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படி கிரியை நடப்பிப்போமாக!

**ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள் - 1தீமோ.2:14**

காணக்கூடாத ஒரு காரியமாகிய மனசாட்சி நம்மை குற்றப்படுத்துகிறது.

☐ மனுஷனுக்குள்ளே இருக்கின்ற ஒரு அழிவில்லாத ஆத்துமாவை புரிந்து கொள்ளுதல் - இன்னும் எவர் ஒருவரும் ஒரு ஆத்துமாவை கண்டதில்லை!

☐ மரித்தோர் உயிர்தெழுதலை குறித்த ஒரே எதிர்பார்ப்பு - கல்லறையிலிருந்து மீண்டும் வந்த ஜனங்கள் யாரும் உறுதிப்படுத்தும்படி நமக்கு இல்லை என்ற போதிலும், மெய்யாகவே மரணத்துக்குப் பின் ஒரு வாழ்க்கை நிச்சயமாக இருக்கிறது!

ஆகையால் முழுமையாக காணப்படாத காரியங்களில் ஒவ்வொரு பண்டைகால மார்க்கத்தின் ஆதிகால அமைப்புகளில் உருவான இத்தகைய அஸ்திபாரமான நம்பிக்கைகள் எவ்வாறு இருந்தன? முடிவாக அந்த மனுஷர்கள் எளிமையாக ஒத்துக்கொள்ளும்வகையிலே, ஒன்றுமில்லாத நிலையில் இருந்து அல்ல, ஆனால் அவர்களுடைய சொந்தமான தனிப்பட்ட கற்பனைகளில் அவ்வகையான ஆழ்ந்த நம்பிக்கைகள் உருவானது என்பது சாத்தியமான காரியமல்ல. ஆனாலும் அந்த ஆரம்ப அறிவு ஒரு மூலகாரணமானவரிடமிருந்துவந்திருக்க வேண்டும் என்பது வெளியரங்கமாக இருக்கிறது! முதல் மனுஷர்களுக்கு இந்த காணப்படாத உண்மைகளை குறித்து அவர்களை சிருஷ்டித்த தேவன் நிச்சயமாக போதித்திருக்கவேண்டும்.

**கேள்விகள்:**

1. மிக பழமையான மதங்களுடைய குறிப்புகளின்படி, உலகத்தின் ஆதி ஜனங்கள்-- ------- மட்டும் ----------- ---------- -----------.

2. இயற்கையான காரியங்களை தேவனுக்கு சமமாக்கி அவைகளை வழிபடுகிறவர்கள் --------- காரிங்களை ------------ சமமாக்கி அவைகளை வழிபடுகிறார்கள்.

3. பாலி த்தீயிஸம் என்றால் என்ன?

4. ஆரம்ப கால இந்து மத வடிவமைப்பில் ஒரு ஆசாரிய முறைமை, மறு அவதார நம்பிக்கை இவைகள் இருந்தனவா?

5. தேவனுக்குரிய புராதனமான சீன பெயர் என்ன?

6. தேவன்பற்றிய வேதாகம குறிப்பை சுருக்கமாக விவரிக்கவும்.

7. "பிதாக்களின் காலத்தில்" தேவன் யாருடனே கூட ஈடு பாடு உள்ளவராக இருந்தார்?

8. இத்தகைய ஆதிகால மார்க்கங்களும் பொதுவான "சத்தியத்தின் தொடர்ச்சியான குணாதிசயங்கள் மூன்றினைவரிசைப்படுத்தி எழுதவும்.

9. இத்தகைய பழமை வாய்ந்த மார்க்க வடிவமைப்பு எந்த நான்கு காணப்படாத விஷயங்களில் நம்பிக்கையை வெளிப்படுத்தின?

10. பழமையான மார்க்க வடிவமைப்புகளில் இருந்த ஒத்த தன்மைக்கான காரணம் மற்றும் முடிவுடனே கூடிய ஒரே விளக்கம் என்ன?

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். 9443558041





கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்ததினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோம.5:6-9) என பவுல் சொன்னார். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவா.15:12-14) என்றார். "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது' (1யோவா.4:9-10) என்று யோவான் எழுதினார்.

கிறிஸ்து பூமியிலே நன்மைசெய்கிறவராகவே சுற்றித்திரிந்தார். அவர் வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கினார், குருடருக்குப் பார்வையளித்தார், மரித்தோரை எழுப்பினார், அவர் தேவனிடமிருந்து வந்தவர் என்பதை நிரூபிக்கும்படிக்கு இன்னும் அநேக அற்புதங்களைச் செய்தார். யோவான், "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டி ருக்கிறது" (யோவா20:30,31) என்றார்.

இயேசு பரிசுத்தமுள்ளவர், அவர் பாவமற்றவர். பவுல் இயேசுவைக்குறித்து பேசுகையில் தேவனைப் பற்றி, "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2கொரி.5:21) என்றார். "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை என்று பேதுரு (1பேது.2:22) கூறினார்.

மேலும் நாம், அவர் பாவமற்றவர், நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்த நல்ல மனுஷர், தேவனுடைய ஒரே பேறான குமாரன், உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என அறிவுறுத்தப்படுகிறோம். பவுல், "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்" (பிலி2:8) எனச் சொன்னார். பேதுரு, "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்ய வில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை, அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1பேது.2:21-24) மேலும், கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார் (1கொரி.15:3) என்று பவுல் கூறினார்.

ஆனால் எதற்காக கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார், அதாவது யாரோ ஒருவன் ஏன் ஒரு நல்ல மனுஷரை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்க விரும்பினான்? இருந்தபோதிலும் அவர் மனிதனை இரட்சிக்கும்படியாகவந்தார் மாறுபட்ட கருத்துடைய பாவம் நிறைந்த மனிதனோடு பேசி சமாளிக்க வேண்டியவராயிருந்திருக்கிறார். தேவனுடைய பிரதிநிதிகளாக வர்ணிக்கப்படுகிற ஆசாரியர், வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் இன்னும் வேறுசிலர்கூட, மனிதருடைய கற்பனைகள் மற்றும் கட்டளைகளின் பின்னே சென்றார்கள், ஆனபடியினால் அவர்கள் பகை, பொறாமை மற்றும் துன்மார்க்கத்தினால் நிறைந்து காணப்பட்டார்கள். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை" (யோவா.1:11) என அறிவிக்கப்படுகிறோம். மீண்டும் இயேசு, "அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை" (யோவா.5:40) என்றார்.

பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்பட்ட வேளையில் இந்த மார்க்க வைராக்கியமுள்ள ஜனங்களிடம் பேசுகையில் பேதுரு, "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரணஉபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" (அப்.2:22-24) என்றார். கிறிஸ்து பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டபோது, பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்திருந்தான் (மாற்.15:9). இவ்வாறாக கிறிஸ்து தவறாக குற்றஞ்சாட்டப்பட்டு சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுக்கப்பட்டார். துன்மார்க்கரின் கைகளில் அவர் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அடிக்கப்பட்டார், பரியாசம் பண்ணப்பட்டார், சபிக்கப்பட்டார், கொடூர சிலுவையில் ஆணியறையப்பட்டார், இரண்டு கள்ளர்கள் மத்தியில் நிறுத்தப்பட்டு அங்கே மரிக்கும்படி கைவிடப்பட்டார். அதன்பிறகு அவர் கீழே இறக்கப்பட்டு, துணிகளால் சுற்றப்பட்டு, கல்லறையிலே வைக்கப்பட்டு, கல்லறை வாசலில் ஒரு பெரிய கல் புரட்டிவைக்கப்பட்டது. ஆனால் இயேசு தாம் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என வாக்களித்திருந்தார். மூன்று நாட்கள் கழித்து இயேசு உயிர்த்தெழுந்த கர்த்தராக கல்லறையிலிருந்து வெளியே வந்தார். மூன்றாம் நாள் காலையில், ஸ்திரீகள் கல்லறையைப் பார்க்கும்படி வந்தபோது, ஒரு தூதன் அவர்களுக்குத் தோன்றி, அவன், "அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்" (மத்.28:6) என்றான். இயேசு தம்முடைய அப்போஸ்தலருக்குத் தரிசனமான பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார், அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆட்சி செய்யும்படி மறுபடியும் வானத்திலே பிதாவினிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு (1கொரி.15:1-8; அப்.1:1-11) இன்றும் அங்கே வீற்றிருக்கிறார்.

இப்போது மீண்டும், இயேசு சிலுவையில் ஏன் மரித்தார்? அதற்குப் பல காரணங்கள் உண்டு, ஆனால் முக்கிய காரணம் மனிதனை இரட்சிக்கும்படிக்கு மரித்தார் என்பதே உண்மையாகும். ஆனால் கிறிஸ்து அவரது மரணத்தைக் குறித்து சொல்லிய



குறித்து போதிப்பதையும் அவர்களுடனே தொழுது கொள்வதையும் நாம் காண முடியும். முதலாம் அதிகாரம் முதலாம் வசனம் சொல்கிறது, "ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்" என்று வசனம் 5 யோபின் பிள்ளைகளுக்கு தேவனோடிருந்த உறவைக்குறித்து அக்கறையை விளக்குகிறது. "அவர்களை அழைத்தனுப்பி (தன்னுடைய பிள்ளைகளை) பரிசுத்தப்படுத்தி அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான், "ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று" இந்தப் பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்துவருவான்.

**சத்தியத்தின் தொடர்ச்சியான குணாதிசயங்கள்**

பரந்துவிரிந்த முற்கால மார்க்கங்களின் அமைப்புகள் மற்றும் விளக்கங்களை நீங்கள் வாசித்தபடியினால், இந்த ஒவ்வொன்றிலும் சத்தியத்தின் தொடர்ச்சியான குணாதிசயங்கள் என்று நாம் எதை அழைக்கலாம் என்று காண்பீர்களா? நாம் இவைகளை சற்று ஆழ்ந்து கவனிப்போமாக:

1. தேவன் சர்வவல்லமையுள்ளவராக, சகலத்தையும் அறியும் ஆவியையுடையவராக இருக்கிறார் என்ற நம்பிக்கை அப்பொழுது இருந்தது.

2. தேவனுக்கு பலிகள் செலுத்தப்பட்டன இவ்வழக்கம் மேலும் இரண்டு நம்பிக்கைகளுக்கு நிரூபணமாக இருக்கிறது.

அ. நீதியைக் குறித்த "சரி", "தவறு" என்ற அறிவும், தவறு செய்வதை அவர்கள் தெரிந்து கொள்ளும்போது அது தேவனுக்கு கோபமூட்டியது என்பதை புரிந்து கொள்வது விளைவாக இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வோமேயாகில் அவர்கள் தாங்கள் பாவிகள் என்பதை அறிந்திருந்தார்கள்.

ஆ. ஆராதனையில் தேவனுக்கு மிருக பலிகள் செலுத்தப்பட்டன, அவர்களுடைய குற்றங்களின் நிமித்தமாக தேவனை அமைதிப்படுத்தும்படியாக இவைகள் தன்னுடைய பாவங்களை நிவிர்த்தி செய்யும்படியாக மனுஷனுடைய முயற்சிகளாக இருந்தன.

3. ஆதி காலங்களிலிருந்து மனுஷர்கள் தங்களுடைய மரித்தோரை அடிக்கடி பொக்கிஷங்கள், போஜனம் மற்றும் பயன்படு பொருட்கள் இவற்றுடனே மரணத்துக்குப் பின் ஜீவன் என்ற எதிர்பார்ப்புடனே அடக்கம் செய்தார்கள். மனுஷர்கள் மிருகங்களிலிருந்து வேறுபட்டவர்களாயிருந்து ஆத்துமாக்களையுடையவர்களாய் இருந்தார்கள். அவர்கள் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுதலை எதிர்நோக்கியவர்களாய் இருந்தார்கள்.

**காணப்படாத நான்கு விஷயங்களில் அகில உலக நம்பிக்கைகள்**

தொன்மையான மார்க்கங்களில் அவர்களுடைய பழமையான அமைப்பு முறைகளில் பரவலாக அவர்களுக்கு இருந்த அடிப்படையான நம்பிக்கைகளை நாம் பார்த்து இருக்கிறோம். அவைகளை மீண்டும் சிந்தியுங்கள்.

☐ தேவனிடத்தில் நம்பிக்கை - ஆனால் நாம் ஒருபோதும் தேவனை கண்டதில்லை!

☐ பாவம் குறித்த ஒரு உணர்வும், அது தேவனைத் துக்கப்படுத்துகிறபடியால் அது மன்னிக்கப்பட வேண்டியதின் அவசியம் - ஆனால் மனுஷ மனதிற்குள் கண்களால்

பெண்கள் பகுதி

# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா? *-Betty*

## Can Man Find the Way to God?

### சொராஸ்ட்ரியர்கள்




சொராஸ்டர் (628-551 கி.மு) என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட சொராஸ்ட்ரியனிஸம் என்ற மதம் பழமையான மதங்களில் ஒன்றாக இருக்கிறது. குஷ்வந்த் சிங், "இந்தியாவை குறித்த ஒரு முன்னுரை" என்ற புத்தகத்தில் "சொராஸ்டர் ஒரு புதிய மார்க்கத்தை போதிக்கும்படி கூறவில்லை ஆனால் சர்வத்தையும் அறிந்த கடவுளாகிய மஸ்டாவிடம் நம்பிக்கை கொண்ட பழமையான ஒரே மார்க்கமாகிய மஸ்டா-யாஸ்நியை மீண்டும் முன் நிலைமைக்கு கொண்டு வரும்படி கூறினார்" என்று எழுதியிருக்கிறார்.... சொராட்யார்களுடைய நம்பிக்கையின்படி, ஆஹீரா மஸ்டா நல்லவராகவும், சகல ஞானமும் பொருந்திய கடவுளாகவும் இருக்கிறார் ஆங்க்ரா மைன்யு என்பது அசுத்த ஆவியாக இருக்கிறது. சொராஸ்டருடைய நோக்கம் பொல்லாத ஜனங்களை சுத்திகரிப்பதும், அவர்கள் பிசாசுகளை வழிபடுவதை நிறுத்துவதும் ஆகும். அவர்கள் தேவனை ஆராதிக்க பாடிய பாடல்கள் அவர்களுடைய வேதவசனமாகிய ஜென்ட் - அவெஸ்டாவின் பழமையான பாகமாக இருந்தது.

தேவனைப் பற்றிய வேதாகம குறிப்பு வேதாகம குறிப்பின்படி தேவனோடு கூட மனுஷனுக்கு இருந்த மிக பழமையான காலத்திலுள்ள சுருக்கமான காட்சிகளுக்கு ஒத்ததாக தோன்றுகிற குறிப்புகளை மற்ற பதிவுகளில் நாம் கண்டிருக்கிறோம். தேவன் சகலத்தையும் சிருஷ்டித்தார் என்பதையும் பின்னர் காயீனும், ஆபேலும் (ஆதாம், ஏவாளுக்கு முதலில்பிறந்த குமாரர்கள்) தேவனுக்கு பலிகள் செலுத்தியதையும் நாம் வாசிக்கிறோம். பூமிவரலாற்றின் இந்த காலம் அடிக்கடி, "பிதாக்களின் காலம்" என்று குறிப்பிடப்படுகிறது, ஏனென்றால் இந்த காலத்திலே தேவன் குடும்பத் தலைவர்களோடு கூட ஈடுபாடு உள்ளவராக இருந்தார். அவர்களிடம் நேரடியாக பேசிக்கொண்டிருந்தார் அல்லது தம்முடைய சித்தத்தின்படி தொடர்பு கொள்ள தேவதூதர்களை அனுப்பிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஆசாரியத்துவ முறைமை இல்லை, ஆனால் பிதாக்கள் தங்களுடைய குடும்பங்களுக்கு ஆவிக்குரிய தலைமை வகித்து பாவத்துக்காக செலுத்த தேவையான பலிகளை செலுத்திக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதையும் தங்களுடைய பிள்ளைகளுக்கு போதித்துக்கொண்டிருந்தார்கள்.

ஆதியாகமம் புத்தகம் முழுவதும் லாமேக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் பலர் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்ததையும் அவர்கள் தேவனோடு பேசியதையும், அவரை தொழுதுகொண்டதையும், அவருக்கு கீழ்ப்படிந்து பலிகள் செலுத்தியதையும், தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருக்கு கீழ்ப்படிய வேண்டுமென்பதையும் தங்களுடைய தலைமுறைகளின் வாரிசுகளுக்கு போதித்தார்கள்.

யோபின் சரித்திரத்தில் தேவபக்தியுள்ள தகப்பன் தன்பிள்ளைகளுக்கு தேவனைக்



தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றும்படி சிலுவையில் மரித்தார் (கொலோ.2:14,யோவா.1:17, மத்.26:28) மனிதன் தன்னுடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற வேண்டுமென அவர் தம்முடைய இரத்தத்தை சிந்த மரித்தார் (எபே.1:7; அப்.22:16), சபையை ஸ்தாபிக்கும்படி மரித்தார் (எபே.5:25) மேலும் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொடுக்கும்படி மரித்தார் (2தெச.2:16).

ஆனால் கிறிஸ்து உலகத்தை இரட்சிக்கும்படி சிலுவையில் மரித்தார் என்பது உண்மையாகயிருந்தும், உலகமுழுவதிலும் அநேகர் இழந்தவர்களாக இருக்கின்றனர். ஏன்? இதற்கு பல காரணங்கள் உண்டு. அநேகர் தேவனுடைய சித்தத்தை அறியாதவர்களாக இருக்கின்றனர். பவுல், நான் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன் அறியாமையிலே நான் சபையை துன்பப்படுத்தினேன் என்றார் (1தீமோ.1:13) மற்றவர்கள் தாங்கள் இரட்சிக்கப்படும்படி தங்களில் அல்லது ஒரு சிறந்த நன்னெறி வாழ்வில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். ஆனால் கொர்நேலியும் அவன் வீட்டாரும் நல்ல ஜனங்களாக இருந்தார்கள், ஆனாலும் இரட்சிக்கப்படும்படி கர்த்தருக்குக் கீழ்ப்படிவது அவர்களுக்கு அவசியமாயிருந்தது (அப்.10). தேவனுடைய மகிமையை விட மனுஷருடைய மகிமையை நேசிக்கிறவர்கள் அநேகர் உண்டு. கிறிஸ்து தம்மிடத்தில் விசுவாசமிக்கவர்களாயிருந்தும் தங்களுடைய நாட்களின் மதத் தலைவர்களால் தாங்கள் புறக்கணிக்கப்படுவோம் என்ற பயத்தினால் தம்மை அறிக்கை பண்ணாதவர்களைக் குறித்து பேசி, பிறகு அவர்கள் ஏன் தம்மை அறிக்கை பண்ணவில்லை என்பதைப் பற்றி விவரிக்கிறார்: ''அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்'' (யோவா.12:43). ஆம், இன்றும் இவர்களை போல் அநேகர் உண்டு. அவர்கள் சமயக் காரியங்களில் வஞ்சிக்கப்பட்ட உலக ஜனங்கள். யோவான், ''பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்'' (1யோவா.4:1). கள்ளப்போதகர்கள் அநேகர் இருக்கின்றபடியினால், இப்போதும் கூட, அவர்களால் அநேகர் வழி தவறிப் போகின்றனர். மேலும் கடைசியாக, அநேகர் உலகத்தை நேசித்து, மாம்சத்தின் கிரியைகளில் சந்தோஷமடைகின்றனர். இத்துடன் ஒரே பிரச்சனை என்னவென்றால், கர்த்தர் உலகத்தில் அன்பு கூராதிருங்கள் என்று நமக்கு சொல்லுகிறார் என்பதே. மேலும் மாம்சத்தின் கிரியைகள் மரணத்திற்கு இட்டுச் செல்லும் (கலா.5;ரோம.6:23).

என்னுடைய சிநேகிதரே, நீங்கள் இரட்சிக்கப்படும்படி கிறிஸ்து உங்களுக்காக மரித்தார் என்பதை அறிந்து கொண்டீர்களா? தயவுசெய்து அவரைப் புறக்கணியாதீர்கள் அல்லது இரட்சிக்கப்படும்படிக்கு அவர் ஒருவரே பரிகாரியாயிருக்கும் போது அவரை மறுதலிக்காதீர்கள். மேலும் அவர் ஒருவரே உங்களுக்கு நம்பிக்கை அளிப்பவர். அவரில் நீங்கள் விசுவாசம் வைத்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அவர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக் கொள்வார். மேலும் நீங்கள் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் நிலைத்திருந்தால் ஒரு நாள் அவர் பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டை அருளிச்செய்வார் (மாற்.16:16; மத்.10:32; அப்.2:38,47; வெளி.2:10).

**ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள் - ரோமர் 5:19**

## தெரிந்துகொள்ளுங்கள் இஸ்ரவேல் தேசம்

K.R.K.Ravi Asir
Associate Editor

இத்தேசத்தின் பெயரானது நம்முடைய முற்பிதாவாகிய யாக்கோபின் பெயர் மாற்றப்பட்டு அதிலிருந்து வந்தது (ஆதி.32:28). முற்பிதாக்களின் சந்ததியாரால் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்தபொழுது மரியாதைக்குரிய பட்டப்பெயராக ஏற்றுக்கொள்ளப்பட்டது (யாத்.1:9,12; எஸ்றா 2;2; யோவான் 3:10; பிலி.3:5) பின்னர் இந்தப் பெயரானது யூதாவின் தென் இராஜ்யத்திற்கு எதிராக இருந்து வந்த எப்பிராயீமின் இராஜ்யத்திற்கு பொருந்துவதாக வந்தது (1இரா.12:17,18; 1நாளா.5:17) இன்னும் பிற்காலத்தில் எப்பிராயீம் அழிந்த பின்பு இஸ்ரவேல் என்ற பெயரானது யூதா ராஜ்யத்தைக் குறிப்பிட பயன்பட்டது (எரே.10;1) எனவே பூகோள ரீதியாக வேத வசனங்களிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவான தேசத்தை சுட்டிக்காட்டுவது என்பது கடினமான ஒரு காரியமாக இருக்கிறது. இருப்பினும் "இஸ்ரவேல் தேசம்" என்ற பதம் ஒப்புக்கொள்ளத்தக்க வகையில் இஸ்ரவேல் ஜனங்கள் அனைவரும் அல்லது அவர்களில் ஒரு பகுதியினர் வாழ்ந்து வந்த பூமியின் ஒரு பகுதியே எப்பொழுதும் "இஸ்ரவேல்" என்ற பெயருக்கு தொடர்புடையதாக இருந்திருக்கிறது (1சாமு.13:19; 1நாளா.22:2; 2நாளா.2:17; எசேக்.40:2,47:18). மோவாபியருடைய கல்வெட்டுக்களும், அசீரியருடைய இலக்கியங்களும் குறிப்பாக "இஸ்ரவேல் தேசம்" என்ற பெயரில் வடக்கு இராஜ்யத்தைக் குறிப்பிடுகின்றன. இஸ்ரவேலின் ஆகாப் இராஜாவினால் சல்மனோசர் 3 என்பவருக்கு 2,000 இரதங்களும் 10,000 இராணுவ வீரர்களும் வழங்கப்பட்டன.




எப்படியிருப்பினும் "இஸ்ரவேல் என்ற பதத்தை "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம்" என்ற பதத்திலிருந்து பிரிக்க இயலாது என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டியது அவசியமாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தின் பரப்பளவு 10,330 சதுரமைல்கள் அளவுக்கு மேலாக இல்லை. இந்த தேசம் அடிக்கடி "தாண் முதல் பெயர்செபா வரை" என்று விவரிக்கப்படுவதை நம்மில் பலர் அறிந்திருக்கிறோம் (நியா.20:1; 1சாமு.3:20; 2சாமு.3:10; 1இரா.4:25).

### வேத அறிவுப்போட்டி: 167 -ன் விடைகள்

| | |
|---|---|
| 1. தீமையினால் | - மத்.5:37 |
| 2. இஸ்ரவேலர் | - மல்.1:8 |
| 3. நரகத்தில் | - மாற்.9:44 |
| 4. ஆபிரகாம், இஸ்மவேல் | - ஆதி.17:26 |
| 5. சகேயு | - லூக்.19:2 |
| 6. மோசே | - யாத்.32:32 |
| 7. இயேசுவை | - யோவா.8:57 |
| 8. தீட்டுப்படவேண்டாம் | - லேவி.19:31 |
| 9. பவுலையும், சீலாவையும் | - அப்.17:7 |
| 10. எத்தியோப்பிய தேசத்து | - எண்.12:1 |

### வேத அறிவுப்போட்டி:167-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2. Mrs. ருக்மணி ஜெயசீலன் | - தேனி |
| 3. J. ஜான் பிரபாகரன் | - தேனி |
| 4. R. ஜோஸ்வா செல்வகுமார் | - சிவகாசி |
| 5. M. இராமச்சந்திரன் | - தூத்துக்குடி |
| 6. T. இராஜாத்தி | - கோம்பை |
| 7. R. கஸ்தூரி | - தூத்துக்குடி |
| 8. S. லதா சூரியமூர்த்தி | - தேனி |
| 9. K. மோகன் | - குமாரபாளையம் |
| 10. J. ஜாய்வாசுகி | - கோவை |
| 11. S. வித்யா | - கோவை |
| 12. A. ஜோதிகாந்தம் | - வேலூர் |
| 13. R. ஸ்டெல்லா இளமதி | - திருப்பூர் |
| 14. S. தமிழ்செல்வன் | - நாமக்கல் |
| 15. S. லெனின் | - நாமக்கல் |
| 16. K. அன்பழகன் | - நாமக்கல் |
| 17. P. வடிவேல் | - நாமக்கல் |
| 18. D. டேவிட் | - சென்னை |
| 20. Mrs. பொன்னிவிக்டர் | - திருப்பூர் |
| 21. D. சாந்தாதேவி | - தேனி |
| 22. S. தங்கம் | - கன்னியாகுமரி |
| 23. Sis. அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 24. J. எஸ்தர் | - திருவள்ளூர் |
| 25. D.S. ஜூலியன் | - திருவள்ளூர் |
| 26. Mrs. இராஜம்மாள் | - திருப்பூர் |
| 27. S. சரோஜினி | - திருப்பூர் |
| 28. P. ராஜா | - நாமக்கல் |
| 29. P. தங்கமுத்து | - நாமக்கல் |
| 30. N. நல்லமுத்து | - நாமக்கல் |
| 31. K. வேலாயுதம் | - நாமக்கல் |
| 32. P. மார்த்தாள் | - நாமக்கல் |
| 33. A. சந்திரசேகர் | - நாமக்கல் |
| 34. V. அருணாசலம் | - நாமக்கல் |
| 35. Sis. சினேகவர்சினி | - நாமக்கல் |
| 36. P. செல்லத்துரை | - நாமக்கல் |
| 37. S. சூர்யா | - சென்னை |
| 38. S. ராஜா | - நாமக்கல் |
| 39. K. அறிவழகன் | - நாமக்கல் |
| 40. Ira. எதிராசன் | - சங்கரி |
| 41. M. நான்சி | - வேலூர் |
| 42. A. ரெபேக்காள் | - மதுரை |
| 43. S.M. ராஜசிங் | - திருப்பூர் |



## ஜூலை 11-ம்தேதி திருச்சியில் நடைபெற்ற கிறிஸ்துவின் சபை ஊழியர்கள்கூட்டத்தில் கலந்துகெண்டவர்கள்



## தேனி மாவட்டம் கம்பம் பகுதியில் நடைபெறும் ஊழியத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் மற்றும் சபை ஊழியர் சகோ.ஜீவதுரை அவர்கள்



